# தமிழ் வளர்ச்சிக் கழகம்

## செய்தி மின் மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும்
2 : 5 மே 2026

### உங்களுடன்

வணக்கம்.
தமிழ் வளர்ச்சிக் கழகப் பணிகள்
நாளுக்கு நாள்
நம்பிக்கை தருகின்றன.
நம்பிக்கையின் பதிவாக
வரும் 27/6/26 சனிக்கிழமை
அறங்காவலர்குழு,
ஆட்சிக்குழு,
ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டங்கள்!
கடந்த ஓராண்டில்
நடந்த பணிகளைச்
சீர்தூக்கிப் பார்க்கவும்,
வரும் காலப் பணிகளைச்
சீராக்கவும்
உறுப்பினர்களின்
கருத்துகளுக்கும் தீர்மானங்களுக்கும்
காத்திருக்கிறது
தமிழ் வளர்ச்சிக் கழகம்!
நிதி ஆதாரம் குறைந்து
திட்டப் பணிகளில்
ஊட்டம் குன்றியிருந்த
தமிழ் வளர்ச்சிக் கழகம்
தமிழ்நாடு அரசின் ஆதரவுடன்
அறங்காவலர் குழுத் தலைவர்
மாண்புமிகு மேனாள் ஒன்றிய அமைச்சர்
அவர்களின் ஈடுபாட்டுடன்
புதிய தெம்போடு
தலை நிமிர்ந்திருக்கிறது!
குறுகிய காலத்தில்
நாடகவியல் களஞ்சியமும்
இரண்டு தொகுதிகளில்
தமிழியல் கலைக்களஞ்சியமும்
வெளிவந்து
தமிழ் உலகின்
கவனத்தை ஈர்த்துள்ளன!
தொடரும் பணித்திட்டங்களான
சிந்தனைக் களஞ்சியமும்
மாணவர் அகராதியும்
விரைவில் நிறைவேறும்
நிலையில் உள்ளன.
வழக்கம் போல
‘சொல் புதிது’
வளர்ந்துகொண்டே இருக்கிறது!
வந்திருக்கிற
புதிய திட்டங்கள் குறித்தும்
மேற்கொள்ளக் கருத வேண்டிய
திட்டங்கள் குறித்தும்
நடந்து கொண்டிருக்கின்றன
கலந்தாய்வுக் கூட்டங்கள்!
இடையே, அக்டோபரில்
கனடாவில் நடைபெறவுள்ள
‘செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும்
தமிழரும்’
மாநாட்டுப் பணிகளிலும்
தமிழ் வளர்ச்சிக் கழகம்!
இப்படியாகத்
தொடரும் பணிகளில்
தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
முன்னாள் துணைத் தலைவர் -
தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர்
முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களும்,
பொருளாளராகவும் இருந்த
முனைவர் வ. ஜெயதேவன் அவர்களும்
தோன்றாத் துணைவர்களாக
இப்போதும்
வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள்!
கூடுதலாக
உங்கள் ஒத்துழைப்போடும்
ஆதரவோடும்
இனியும்
பயணிப்போம் தொடர்ந்து
பணிகளோடு!

அன்புடன்
ம.ரா.

# அலோசனைக் கூட்டம்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 06.05.2026 அன்று முற்பகல் 11.30 மணியளவில் சிந்தனைக் களஞ்சியம் தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் கலந்துகொண்டோர் விவரம்: தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் ம.இராசேந்திரன், பேரா. சா. சரவணன், பேரா. வாணி அறிவாளன், முனைவர் மு. இராமசுவாமி, இரா. வெற்றிச் செல்வி, செல்வி அன்பரசி

சிந்தனைக் களஞ்சியம் நூல் சிறப்புற வெளிவரவும் அந்நூலில் இடம்பெற வேண்டிய பொருண்மைகளுக்கான கருத்துகள் குறித்தும் கலந்துரையாடப் பெற்றது.



18.05.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழக ஆட்சிக் குழுத் தலைவர், பொருளாளர் ஆகியோர் கலந்துகொண்ட நிருவாகக் கூட்டம் நடைபெற்றது. 2025-26 ஆம் ஆண்டின் பணிகள் குறித்தும் நிதி நிலை மற்றும் தமிழியல் கலைக்களஞ்சியம் அச்சுப் பணி தொடர்பாகவும் பணிகளை விரைவுபடுத்துதல் குறித்தும் கலந்துரையாடல் நடைபெற்றது.

# கலந்துரையாடல்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தில் 13.05.2026 அன்று மாலை 3.00 மணியளவில் மாணவர் அகராதி தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் கலந்துகொண்டோர் விவரம்: தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் ம. இராசேந்திரன், பேரா. சா. சரவணன், முனைவர் ஒப்பிலா மதிவாணன், முனைவர் அ. ஜேம்ஸ்

தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் அவர்கள், மாணவர் அகராதியின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்த பின்னர், அகராதியில் தாம் கண்ட பிழைகளைச் சரிசெய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், தேவைப்பட்டால் ChatGPT, Gemini போன்ற செயற்கை நுண்ணறிவுக் கருவிகளைப் பயன்படுத்தி அகராதியைச் செப்பனிடலாம் எனக் கருத்து தெரிவித்தார். திருத்திய படிவத்தை 27.05.2026 அன்று அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில், முனைவர் மாதையன் மற்றும் முனைவர் மு. இராமசாமி ஆகியோரின் திருத்தக் குறிப்புகள் கிடைக்கப்பெற்றதால், அவர்கள் சுட்டிக்காட்டிய திருத்தங்களையும் அகராதியில் இணைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. மேலும், அவை அஞ்சல் வழியாக முனைவர் அ. ஜேம்ஸ் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

மாணவர் அகராதியில் திருத்தங்கள் செய்த பின்னர், 03.06.2026 அன்று மீண்டும் கூட்டம் நடத்தலாம் எனத் திட்டமிடப்பட்டது.



# சொல்புதிது 13

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சொல் புதிது என்னும் திட்டத்தின் பதின்மூன்றாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 20.05.2026 புதன்கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்றது. இக்கூட்டத்தில் இறுதி செய்யப்பெற்ற சொற்கள் பின்வருமாறு:

| வ. எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1 | Anathama | ஆதரவற்றோர் |
| 2 | Antithetic | நேர்மாறான |
| 3 | Archaic Ancestry | தொல் மரபினர் |
| 4 | Avowed commitment | பணிக்கடன் |
| 5 | Bathroom cleaner | குளியலறைத் தூய்மி |
| 6 | Boomeranged | வளரித்தாக்கு |
| 7 | Cabined | அடைக்கப்பட்ட |
| 8 | Concourse | பொதுத்தளம் / கூடல் இடம் |
| 9 | Catastrophe | பேரழிவு |
| 10 | Crossbody bag | குறுக்குத் தோள்பை |
| 11 | Debut contestant | புதுமுகப் போட்டியாளர் |
| 12 | Duffle bag | உருளைப்பை |
| 13 | Excult | பண்பாட்டுப் புறனடை |
| 14 | Facile act | மேம்போக்குத்தனம் |
| 15 | Floor cleaner | தரைத் தூய்மி |
| 16 | Founding mothers | நிறுவனத் தாயர் |
| 17 | Haplo group | மரபணுக் குழு |
| 18 | Hobo bag | பிறை வடிவப்பை |
| 19 | Jabs | குத்தல் |
| 20 | Kitchen cleaner | அடுக்களைத் தூய்மி |
| 21 | Laptop backpack | மடிக்கணினி முதுகுப்பை |
| 22 | Nurdles | நெகிழித் துகள்கள் |
| 23 | Ominous | தீக்கனா |
| 24 | Peppering | காரசாரம் / எரிச்சலூட்டுதல் |
| 25 | Plutocratic | செல்வாதிகார ஆட்சி |
| 26 | Potpourri | நறுமணக்கலன் |
| 27 | Profanities | இழிசொல் |
| 28 | Rational nexus | இயல்பு இணக்கம் |
| 29 | Satchel bag | பள்ளிப்பானிப் பை |
| 30 | Sedentary lifestyle | இயக்கமில்லா வாழ்க்கை முறை |
| 31 | Shoulder bag | தோள்பை |
| 32 | Slider bag | மூட்டுப்பை |
| 33 | Sling bag | தோள்பட்டைச் சுருக்குப்பை |

| | | |
|---|---|---|
| 34 | Smoke-and-mirrors approach | மாய்மால அணுகுமுறை |
| 35 | Snile | ஏளனம் |
| 36 | Stepwell | படிக்கிணறு |
| 37 | Tactile flooring | தொடுதரை |
| 38 | Teeters | தள்ளாட்டம் |
| 39 | Tendentiousness | சார்பு நோக்கு |
| 40 | Toilet cleaner | கழிவறைத் தூய்மி |
| 41 | Torpedoing | தகர்த்தழித்தல் |
| 42 | Tote bag | கைப்பை |
| 43 | Trolley bag | உருளிப்பை |
| 44 | Vacuum cleaner | உறிஞ்சித் தூய்மி |
| 45 | Waist bag | இடுப்புப் பை |
| 46 | Window canister | வெளிப்படு கொள்கலன் |
| 47 | Zipper bag | இழுப்பூட்டுப் பை |

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் மு. இராமசுவாமி, சா.சரவணன், ஒப்பிலா மதிவாணன், விஜயலட்சுமி ராமசுவாமி, ம. இளங்கோவன், தி. கமலி, இரா. கஸ்தூரிராஜா, பாரதி பாலன், ஊடகவியலாளர்கள் திரு. ராஜ் கண்ணன், திரு. நீரை மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




எந்தெந்த ஆங்கிலச் சொற்களுக்கு நிகராகத் தமிழில் சொற்கள் உருவாக்கப்பட வேண்டுமோ அந்த ஆங்கிலச் சொற்களை எவரும் அனுப்பலாம்.

## கலந்துரையாடல்

27.05.2026 அன்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் வலைத்தள மேம்பாடு குறித்த கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. வலைத்தளத்தில் மேற்கொள்ள வேண்டிய சீரமைப்புப் பணிகள் குறித்து வலைத்தளப் பணியாளர்களுடன் கலந்துரையாடி ஆற்றுப்படுத்தப்பட்டன.



## வருந்துகிறோம்!



**முனைவர் இ.சுந்தரமூர்த்தி**

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
முன்னாள் துணைத் தலைவர்

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முன்னாள் துணைத் தலைவரும், தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தருமான பேராசிரியர் **முனைவர் இ.சுந்தரமூர்த்தி** அவர்கள் கடந்த 13/5/26 காலையில் இயற்கை எய்திவிட்டார். சங்க இலக்கியம், இலக்கணம், திருக்குறள், பக்தி இலக்கியம், சுவடியியல் ஆய்வு என்று பலதுறைகளிலும் ஆழங்கால்பட்ட புலமைக்குச் சொந்தக்காரர். அவரின் மறைவு தமிழுலகுக்குப் பேரிழப்பாகும். தமிழ் வளர்ச்சிக் கழகம் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

CHENNAI
இந்து தமிழ் திசை
6 கருத்துப் பேழை
சனி, மே 16, 2026 www.hindutamil.in

கி. ராஜநாராயணன், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த இடைச்செவல் கிராமத்தில் பிறந்து வளர்ந்த எழுத்தாளர். இவர், 1991இல் 'கோபல்லபுரத்து மக்கள்' நாவலுக்காக சாகித்ய அகாதமி விருது பெற்றார்.

கு. அழகிரிசாமி, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த இடைச்செவல் கிராமத்தில் பிறந்து வளர்ந்த எழுத்தாளர். இவர், 1970இல் 'அன்பளிப்பு' என்ற சிறுகதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாதமி விருது பெற்றார்.

# அறிவுக் கருவூலத்தின் புதிய பரிமாணம்

**சுப்பிரமணி இரமேஷ்**
எழுத்தாளர்
தொடர்புக்கு: ramesh5480@gmail.com

வாழ்வியற் களஞ்சியம், அறிவியல் களஞ்சியம், நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம், பாலியல் கலைக்களஞ்சியம், மூலிகைக் கலைக்களஞ்சியம், தமிழிசைக் கலைக்களஞ்சியம், மருத்துவக் களஞ்சியம் என்று ஏராளமான களஞ்சிய நூல்கள் தமிழில் உள்ளன. இதற்கெல்லாம் முன்னோடியாக விளங்குவது, ம.ப. பெரியசாமித்தூரனை முதன்மை ஆசிரியராகக் கொண்டு உருவாக்கப்பட்ட 'கலைக்களஞ்சியம்'தான். Encyclopaedia என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகராகக் 'கலைக்களஞ்சியம்' என்ற சொல்லை உருவாக்கியவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார்.

**தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தோற்றம்**

சென்னை மாநிலக் கல்வி அமைச்சராக இருந்த தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார், 1946ஆம் ஆண்டில் 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்ற அமைப்பை உருவாக்கினார். ஆங்கிலத்திலுள்ள Encyclopaedia போன்று தமிழிலும் கலைக்களஞ்சியங்களை உருவாக்குவதையே இக்கழகம் முதன்மைப் பணியாக மேற்கொண்டது. கலைக்களஞ்சியத்தின் முதல் தொகுதி 1954ஆம் ஆண்டு 742 பக்கங்களுடன் வெளிவந்தது. கலைக்களஞ்சியத்தின் பத்தாவது தொகுதி இணைப்புத் தொகுதியாக 1968இல் வெளிவந்துள்ளது.

**களஞ்சியத்தின் உள்ளடக்கம்**

கலைக்களஞ்சியத்தில் தமிழ், தாவரவியல், விலங்கியல், தத்துவம், சமயம், உளவியல், அளவையியல், ஆங்கிலம், நாடகம், இசை, புள்ளியியல், விவசாயம் போன்ற நாற்பத்தேழு துறைகள் சார்ந்த சொற்கள் இடம்பெற்றுள்ளன. 2240 அறிஞர்கள் இச்சொற்கள் குறித்து எழுதியுள்ளனர். இந்தப் 10 தொகுதிகளையும் வெளியிட 21 ஆண்டுகள் (1947–1968) ஆகியுள்ளன.

**ஆவணப் பதிப்பும் தமிழியல் களஞ்சியமும்**

நீண்டகாலமாக மறுபதிப்பு வராமலிருந்த கலைக்களஞ்சியத்தின் பத்துத் தொகுதிகளையும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் இரண்டாண்டுகளுக்கு முன்பு ஆவணப் பதிப்பாக வெளியிட்டது. பல ஆண்டுகளாகச் செயலற்ற நிலையிலிருந்த தமிழ் வளர்ச்சிக் கழகமும் தற்போது செயல்படத் தொடங்கியுள்ளது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ம.இராசேந்திரன், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ஆட்சிக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, சில ஆக்கப்பூர்வமான பணிகளை இக்கழகம் செய்துவருகிறது. 1954 முதல் 1968 வரையிலான காலகட்டத்தில் வெளியான கலைக்களஞ்சியத்தின் பத்துத் தொகுதிகளிலும் உள்ள தமிழியல் தொடர்பான தரவுகளை மட்டும் பிரித்து, 'தமிழியல் கலைக்களஞ்சியம்' என்ற பெயரில் இரண்டு பெரும் தொகுதிகளைத் தற்போது வெளியிட்டுள்ளது. இது ஓர் அரிய பணியாகும்.

நூல் வெளி

**பங்களித்த ஆளுமைகளும் ஆய்வுகளும்**

கலைக்களஞ்சியத்தில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரையும் அந்தந்த துறைகளில் அறிஞர்களாக இருப்பவர்களைக் கொண்டே எழுதப்பட்டிருந்தன. அவ்வகையில் தமிழியல் பகுதிக்கு தெ.பொ.மீ., மு.வ., எஸ். வையாபுரிப் பிள்ளை, மு. சண்முகம் பிள்ளை, சுந்தர சண்முகனார், கி.வா. ஜகந்நாதன், மயிலை சீனி. வேங்கடசாமி, பு.ரா. புருஷோத்தம நாயுடு, அ.ச. ஞானசம்பந்தம் போன்ற பெரும் ஆளுமைகள் பங்களித்துள்ளனர். தெ.பொ.மீ. பன்னிரண்டு உயிரெழுத்துகள் பற்றியும் விரிவான கட்டுரைகள் எழுதியுள்ளார். இந்தப் பன்னிரண்டு கட்டுரைகளுமே முக்கியமானவை. குறிப்பாக 'அ' என்ற உயிரெழுத்துத் தமிழில் எப்படியெல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்பதை இலக்கணம், மொழியியல், வட்டார வழக்கு, பேச்சு வழக்கு என ஒவ்வொரு கோணத்திலும் ஆராய்ந்து எழுதியிருக்கிறார். நூலின் முதல் கட்டுரையே பெரும் வியப்பை ஏற்படுத்துகிறது.

**இலக்கியத் தரவுகளும் வரலாறும்**

ஔவையார் பற்றி மு.வ. ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். தமிழ்ச் சூழலில் காலந்தோறும் 'ஔவையார்' என்ற பெயரில் பல புலவர்கள் வாழ்ந்திருக்கின்றனர். ஔவையைப் பற்றி பல்வேறு கதைகள் புழங்குகின்றன. காட்சி ஊடகம் கட்டமைத்த ஔவையார் மட்டுமே அனைவருக்கும் தெரிந்தவராக இருக்கிறார். சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையும் ஆத்திசூடி பாடிய ஔவையும் வெவ்வேறு நபர்கள் என்பதைக்கூட பொதுச்சமூகம் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. இவரைப் பற்றி எழுதப்பட்டுள்ள வரலாறுகள் மிகச் சுவாரசியமாக இருக்கின்றன. அதில் 'திருவள்ளுவ நாயனார் சரித்திரம்' ஔவையின் தம்பிதான் திருவள்ளுவர் என்கிறது.

சங்க இலக்கியம் பற்றிய ஒட்டுமொத்தமான தரவாகத் தமிழியல் கலைக்களஞ்சியம் இருக்கிறது. சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள புலவர்கள், அரசர்கள், இடங்கள், பொருட்கள் என ஒவ்வொன்றுக்கும் முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டுள்ளன. 'அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்' என்ற ஒரே பாடலைப் பாடிய பாரி மகளிரைப் பற்றி அனைவரும் அறிந்திருப்பர். 'கங்குல் வெள்ளத்தார்' என்ற புலவரும் குறுந்தொகையில் ஒரே பாடலைப் பாடியுள்ளார். இவரும் தமிழியல் கலைக்களஞ்சியத்துக்கு முக்கியமானவர். மாணவர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், கல்வி நிறுவனங்கள், நூலகங்கள் என அனைத்துத் தரப்பிடமும் இந்த இரு தொகுதிகளும் நிச்சயம் இருக்க வேண்டும்.

**நம்பகத்தன்மையும் எதிர்காலமும்**

தமிழியல் கலைக்களஞ்சியம் என்பதால் தமிழ் இலக்கியம் தொடர்பான செய்திகளுடன் ஓவியம், கட்டடக்கலை, இசைக்கலை, சிற்பம், தத்துவம் எனத் தமிழுடன் தொடர்புடைய பிறதுறைத் தரவுகளும் இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. இது கூடுதல் சிறப்பு. கலைக்களஞ்சியத்தின் கட்டுரைகள் துறை சார்ந்த வல்லுநர்களால் எழுதப்பட்டுள்ளன. அதனை ஒரு குழு ஆய்வு செய்து ஒழுங்குபடுத்தியுள்ளது. அதனால் தரவுகள் நம்பத்தகுந்ததாக உள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பணி எப்போதும் நினைவுகூரப்படும். தமிழியல் கலைக்களஞ்சியத்தின் பதிப்பாசிரியர்களான ம. இராசேந்திரன், வ. ஜெயதேவன், பெ. அர்த்தநாரீசுவரன் ஆகிய மூவரும் தமிழுக்கு ஓர் அரும்பணியைச் செய்துள்ளனர். தமிழ் வளர்ச்சிக் கழகம் அடுத்தடுத்துச் செய்யத் திட்டமிட்டுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். புதிய அரசு, இந்தப் பணிகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.




தமிழியல்
கலைக்களஞ்சியம்
பதிப்பாசிரியர்கள்:
ம. இராசேந்திரன்,
வ. ஜெயதேவன்,
பெ. அர்த்தநாரீசுவரன்
தமிழ் வளர்ச்சிக் கழக
வெளியீடு
விலை: ரூ.2400
(இரு தொகுதிகள்)
தொடர்புக்கு:
044-25365440




# நூல் விற்பனை (50% கழிவுடன்)

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களும் (தமிழியல் கலைக்களஞ்சியம், நாடகவியல் களஞ்சியம் நீங்கலாக) 50% சிறப்புக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.




**விரைவில்**

**ஒவ்வொரு தொகுதியும் 1000 பக்கங்களுக்கு மேல்**

## தமிழியல் கலைக்களஞ்சியம்

**தொகுதி 1 ரூ.1000**

**தொகுதி 2 ரூ.1000**

ரூ.750 விலையுள்ள

## நாடகவியல் களஞ்சியம்

**ரூ.500க்குக் கிடைக்கும்.**

தொடர்புக்கு:
தமிழ் வளர்ச்சிக் கழகம்
சென்னைப் பல்கலைக்கழக வளாகம்
சேப்பாக்கம், சென்னை 600 005
தொலைபேசி: 044-25365440, இணைய வலைத்தளம்: www.tamilvk.org
மின்னஞ்சல்: tamilvalarchikazhagam2024@gmail.com